**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 02.07.2025**
**RLTOP.No.3/2023**
**வழக்கு சாட்சி PW.1– அன்பழகன் , த/பெ.சித்தையன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) இந்த வழக்கை எதிர்மனுதாரர் மனோகரன் மீது அவர் வாடகைக்கு குடியிருக்கும் வீட்டிற்கு வாடகை கொடுக்கவில்லை என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். நான் சேலத்தில் 2017 ம் வருடத்திலிருந்து குடியுள்ளேன். நானும் எதிர்மனுதாரரும் வாடகை ஒப்பந்தம் ஏதேனும் ஏற்படுத்திக்கொண்டோமா என்றால் இல்லை. நான் என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள தங்கமாபுரி பட்டணத்தில் வசிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை, ஆனால் என்னிடம் ஆவணம் உள்ளது.

2) 16.06.2023 ம் தேதியில் நான் எதிர்மனுதாரர் மனோகரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு எதிர்மனுதாரர் பதிலறிவுப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 21.07.2025 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.